இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 14-03-2025



# நிர்மலா சீதாராமனின் நீச பாஷை

அடிமனதில் எவ்வளவு வன்மம் புரையோடிப் போயிருக்கிறது என்பதன் அடையாளம்தான் நாடாளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் வாயில் இருந்து உதிர்த்த சொற்கள் ஆகும். அவர்கள் மொழியில் சொல்வதாக இருந்தால் 'நீச பாஷைகள்' ஆகும்.

"தமிழ்நாட்டில் 43 இலட்சம் பள்ளி மாணவ – மாணவியர் நலனுக்காகத் தர வேண்டிய இரண்டாயிரம் கோடியை ஏப்பம் விட்டுவிட்டீர்களே? எப்போது தருவீர்கள்?" என்று கேட்டால், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், 'தமிழ்நாட்டு எம்.பி.க்களும் மக்களும் நாகரிகமற்றவர்கள், ஜனநாயகமற்றவர்கள்' என்கிறார்.

**முன்பு பெங்களூரில் தன்னை நோக்கிக் கேள்வி கேட்ட மாணவனை, 'இந்த மாதிரி எல்லாம் சிங்கப்பூர்ல கேள்வி கேட்க முடியாது' என்றும், தூத்துக்குடியில், 'இனி யாரும் உண்டியல்ல காசு போடாதீங்க' என்றும் சொல்லி நாகரிகத்தின் அடையாளமாக விளங்கக் கூடியவர் நிர்மலா சீதாராமன் என்பதை நாடும் நாட்டு மக்களும் அறிவார்கள்.**

இவர் நாடாளுமன்றத்தில் இதற்குத் தொடர்பு இல்லாத வகையில் தந்தை பெரியார் மீதான தனது வன்மத்தைக் கக்கி இருக்கிறார். 'தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னவர் படத்தை திராவிட இயக்கத்தவர் அனைவரும் தங்கள் அறையில் மாட்டி வைத்திருப்பது ஏன்?' என்று கேட்கிறார்.

**நிர்மலா சீதாராமன் பெரியாரை படிக்கத் தொடங்க வேண்டும். முன்னையும் பின்னையும் வெட்டி சங்கிகள் பரப்பும் 'வாட்ஸ் அப்' வதந்திகளாக இல்லாமல் முழுமையாகப் படியுங்கள் பெரியார் சொன்னதன் முழுப் பொருளை உணரலாம். 'காட்டுமிராண்டித் தனமான ஆரியக் கொள்கைகள் தமிழை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டதே' என்ற ஆத்திரத்தில் தான் பெரியார் அப்படிச் சொன்னார். அறிவியல் தமிழாக அதனை வளர்க்க வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னார்.**

"தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பாய் இடது கைபோல் பிற்படுத்தப்பட்டு விட்டது. இந்நோய்க்கு முக்கியக் காரணம், மதச் சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக் கொண்டது தான். மதக் கொள்கையைப் பரப்ப வடமொழியும், வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ்நாட்டில் புகத் தொடங்கின. தமிழ் மன்னர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக்கொண்டதால் அம்மதக் கருத்துகளை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லாது போகவே, அதிகமாக வடமொழிச் சொற்களைக் கையாள ஆரம்பித்தனர். **தமிழிலிருந்து ஆரியத்தை போக்கிவிட்டால் நம்மை அறியாமலே நமக்குப் பழந்தமிழ் கிடைத்து விடும். மதத்திற்கு ஆதாரமாய் இருந்து வருவனவெல்லாம் வடமொழி நூல்களே ஒழிய, தமிழ்மொழி நூல்களில் தற்சமயம் நம் நாட்டில் இருந்து வரும் மதத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பது இங்கு கவனிக்கத்தக்கது" (– மொழி எழுத்து நூல்) என்று எழுதி இருக்கிறார் பெரியார்.**

"தமிழில் ஆரியம் புகுந்ததால்தான், மற்ற மக்களெல்லாம் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி வாணிபம் நடத்திய தமிழ் மரபில் – இன்று ஒரு நியூட்டன் தோன்ற முடியவில்லை. ஒரு எடிசன் தோன்ற முடியவில்லை. ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பழமையிலுள்ள மோகத்தை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புதுமொழியாக்கச் சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கட்டளையிட்டார் பெரியார்.

**"ஆங்கிலம் வளர்ந்த மொழி, விஞ்ஞான மொழி என்பதும் தமிழ் வளர்ச்சி அடையாப் பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடு ஆகும். இதை நான் சொன்னதற்கான முக்கிய நோக்கம் தமிழ் மொழி ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும் பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிரத் தமிழ் மீது எனக்குத் தனி வெறுப்பில்லை" (விடுதலை 1.12.1970) என்றார் பெரியார். தமிழ் மீது அவர் வைத்த பாசம்தான், அதன் வளர்ச்சிக்காக அப்படி அவரைப் பேச வைத்தது!**

**"உண்மைத் திராவிடன் தீட்டிய 'திருக்குறள்' குப்பையிலே கிடக்க – திராவிடத் துரோகிகள் தீட்டிய நூல்கள் அதிகாரத்தில் இருந்து வருகின்றன" என்று பொங்கினார்.**

"நாம் மிகப் பெரிய சமுதாயம். நாம் எவ்வளவு முன்னுக்கு வர வேண்டியவர்கள்? நாதியற்றுப் போய் காட்டுமிராண்டியாக அல்லவா இருக்கிறோம்? சொல்லுங்கள்! வெளிநாட்டுக்காரனைப் பார். வெள்ளைக்காரனைப் பாரய்யா!" என்று தனது இறுதிச் சொற்பொழிவில் கூட கெஞ்சியவர் தந்தை பெரியார்.

தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று ஏன் சொன்னார்? 'அதனை காட்டுமிராண்டிக் காலத்தைப் போலவே வைத்திருக்காதே, வளர்ச்சிக்குரியதாக மாற்று' என்று சொன்னார். புராணக் கதைகளை தமிழ்ப் படுத்திச் சொல்லிக் கொண்டிருக்காதே என்பதற்காகச் சொன்னார்.

**இன்று இருந்திருந்தால் அப்படிச் சொல்லி இருப்பாரா? மாட்டார். ஏனென்றால் இன்று அனைத்தும் தமிழில் வந்துவிட்டது. 1950 காலக்கட்டத்தில் கம்பராமாயணம் – பெரியபுராணம் போன்றவையே தமிழாகப் பேசப்பட்டது. பரப்பப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் 'தமிழ்நாடு பாடநூல் வளர்ச்சிக் கழகம்' மூலமாக அனைத்து அறிவியல் நூல்களையும் தமிழ்ப்படுத்தி வெளியிடத் தொடங்கினார். இயற்பியல், வேதியியல், கணிதவியல், மருத்துவம் அனைத்துக்கும் தமிழ்ச் சொற்களைச் சொல்லும் நூற்றுக்கணக்கான அகராதிகள் வந்துவிட்டன. இன்று அறிவியல் தமிழாக, கணினித் தமிழாக, இணையத் தமிழாக, புலனத் தமிழாக – தமிழ் உயர்ந்துவிட்டது. ஊடகம் – தொழில் நுட்பம் வளர வளர தமிழ் அதற்காக சொற்களைத் தேர்வு செய்து புழக்கத்தில் விடுகிறது. இன்றைய தமிழ், பழந்தமிழாக மட்டுமே – ஆரியக் கருத்துக்களைச் சொல்லும் தமிழாக இல்லை. அறிவுப்பூர்வத் தமிழாக இருக்கிறது. இப்படி வளர வேண்டும் என்றே பெரியார் விரும்பினார்.**

தமிழ் எழுத்துக்களைக் குறைக்கச் சொல்லி, எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தவர் பெரியார். அதுதான் இன்று கணினியில் தமிழை எளிமையாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாகவும் அமைந்துவிட்டது என்பதை நிர்மலா அறிவாரா?

தமிழை 'நீஷ பாஷை' என்று சொன்னது யார் என்று தமிழர்கள் அனைவருக்கும் தெரியும். 'குளித்த பிறகு நீச பாஷை காதில் விழக்கூடாது' என்று சொன்னது யார் என்றும் தமிழ்நாடு அறியும். 'உன் மொழியே இழிவானது' என்பது இதன் பொருள்.

**பெரியார் சொல்ல வந்தது, தமிழை அறிவுமொழியாக, அறிவியல் மொழியாக, பயன்பாட்டு மொழியாக மாற்று என்பதுதான். அசிங்கப்படுத்தச் சொன்னதற்கும் – அக்கறையோடு சொல்வதற்கும் வேறுபாடு உணர்ந்த சமூகம் தமிழ்ச் சமூகம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.3.2025) தலைமைச் செயலகத்தில், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சாமிநாதன் அவர்கள் சந்தித்து, சென்னை, போரூர், ராமாபுரத்தில் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் அண்மையில் ஈரநில பசுமை பூங்கா திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ். பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2025) தலைமைச் செயலகத்தில், மொண்டெனேகுரோ நாட்டின், பெட்ரோவாக்கில் நடைபெற்ற FIDE உலக ஜூனியர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரணவ் வெங்கடேஷை பாராட்டி உயரிய ஊக்கத்தொகையாக 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் பிரணவ் வெங்கடேஷ் பெற்றோர் உடனிருந்தனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் – பல்வேறு திட்டங்களால்

# மக்களிடம் 'அப்பா' என்ற அன்பைப் பெற்றுள்ளார்!

### 'ஈ நாடு' தெலுங்கு பத்திரிகை புகழாரம்!






**ஹைதராபாத், மார்ச் 14–**

**"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பல்வேறு திட்டங்களால் அவரை தமிழ்நாடு மக்கள் 'அப்பா' என்று அன்புடன் அழைக்கின்றனர்" என்று 'ஈ நாடு' தெலுங்கு பத்ரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

**இது குறித்து 'ஈ நாடு' பத்ரிகை வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:**

இந்திய அரசியலில் தமிழ்நாடு அரசியல் வேறுபட்டது. கடந்த 50 ஆண்டுகளாக திராவிடக் கட்சிகள் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். 1967க்குப் பிறகு தேசிய கட்சிகள் எதனாலும் தமிழ் நாட்டை ஆளமுடியவில்லை. தமிழ் நாட்டின் ஆளுமைகளை யாரும் பொதுவாக அரசியலில், அரசியல் மேடைகளில் பெயர் அழைக்கும் வழக்கம் இல்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கே உரிய அங்கீகாரம் பெற்ற பெயர்களை வைத்து மரி யாதையுடன் அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. உதாரணத்திற்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., கலைஞர் போன்று மரி யாதைக்குரிய பெயர்களை வைத்து அழைப்பது வழக்கம்.

அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சராக இருந்த மறைந்த ஜெயலலிதா அவர்களை புரட்சித்தலைவி அம்மா என்று அந்த கட்சியின் தொண்டர்கள் அனைவரும் அழைத்தனர்.

**அரசியலில் தளபதி**

தி.மு.க. தொண்டர்களின் தளபதியாக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது 'அப்பா' என்று அழைக்கும் அளவிற்கு மக்களிடம் சென்று அடைந்திருக்கிறார். கடந்த 4 ஆண்டுகளாக ஆட்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு என்று பல பிரத்யேகமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி உள்ளார். இதனால் மாணவர்கள் முதலமைச்சர் அவர்களை பாசத்துடன் 'அப்பா' என்று அழைக்கின்றனர். உதாரணத்திற்கு மாணவர்களுக்கான திட்டங்கள் காலை உணவுத்திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்கள் மாணவர்களை பயன்பெற வைத்துள்ளது.

இத்தகைய திட்டங்கள் மூலம் மாணவர்களிடம் அன்பை பெற்ற முதலமைச்சர் ஸ்டாலின் அப்பா என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். அவர் 'அப்பா' என்ற அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## எஸ்.சி. – எஸ்.டி. – ஓபிசி மாணவர்களின்

# கல்வி உதவித் தொகைக்கான வருமான உச்சவரம்பை அதிகரிக்க வேண்டும்!

### மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவசர கோரிக்கை!



புதுடெல்லி, மார்ச் 14–

பொது அவசரம் மற்றும் முக்கியத்தும் வாய்ந்த விவகாரங்களை மக்களவையில் விதி எண் 377 இன் அடிப்படையில் உறுப்பினர்கள் எழுப்ப முடியும். அந்த வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மார்ச் 12 ஆம் தேதியன்று எஸ்.சி.,எஸ்,டி, ஓபிசி மாணவர்களுக்கான முக்கிய பிரச்சினையை மக்களவையில் எழுப்பினார்.

அப்போது அவர், "பட்டியல் சமூக (SC), பழங்குடி (ST) மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC) மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசரத் தேவையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தற்போது, இந்த மாணவர்களுக்கான மெட்ரிக்-கிற்கு முந்தைய மற்றும் பிந்தைய உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு குடும்ப வருமான உச்சவரம்பு 2.5 லட்சம் ரூபாயாக உள்ளது.

அதேநேரம் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்கான (EWS) தேசிய ஓவர்சீஸ் ஸ்காலர்ஷிப், மற்றும் உயர்தர கல்வித் திட்டம் போன்ற ஸ்காலர்ஷிப் திட்டங்களுக்கு வருமான உச்சவரம்பு 8 லட்சமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய உயர் கல்வி கணக்கெடுப்பின் (AISHE)படி, பட்டியல் சமூக மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் 23.1% ஆகவும், பழங்குடி மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் 18.9% ஆகவும் உள்ளது. இது தேசிய சராசரியான 27.3% என்பதை விட மிகவும் குறைவு.

இவ்வாறான வேறுபாடுகள், பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மாணவர்களுக்கு, உயர் கல்வியில் சமமான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான தலையீடுகளின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாடு அரசு கடந்த டிசம்பர் 2024 இல் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்... ஒன்றிய அரசு SC, ST மற்றும் OBC மாணவர்களுக்கான ப்ரீ-மெட்ரிக் மற்றும் போஸ்ட்-மெட்ரிக் உதவித் தொகைகளுக்கான வருமான உச்சவரம்பை EWS மாணவர்களைப் போலவே 8 லட்சமாக உயர்த்தவும், விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்விச் சேர்க்கையை எளிதாக்கவும் வலியுறுத்தியது.

தமிழ்நாடு அரசின் இந்த முன்மொழிவின் மீது ஒன்றிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தி பேசினார்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் "தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டனப் பொதுக்கூட்டம் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் கழகப் பேச்சாளர் ஆம்பூர் தருமன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், சுப.சீதாராமன், மாலைராஜா, விஜிலா சத்யானந்த், சுரேஷ், கிரிஜா குமார், சுப்பிரமணியன், அருள்மணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.